**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 17** **நாள் : 24.01.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 2024-25ஆம் நிதியாண்டில் பல்வேறு திட்ட நிதிகளின் கீழ், 2,253 பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியும், மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், மாண்புமிகு மேயர் அவர்களின் ஆலோசனையின்படியும் பெருநகர சென்னை மாநகராட்சியில், பல்வேறு திட்டங்களின் கீழ் பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் அமைக்கும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியால் 387 கி.மீ. நீளமுடைய 471 பேருந்து தட சாலைகள் மற்றும் 5,270 கி.மீ. நீளமுடைய 34,640 உட்புறச் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், மாநில நிதி ஆணையம், தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIF), சிங்கார சென்னை 2.0, நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டம் I & II மற்றும் மாநகராட்சி மூலதன நிதி மற்றும் வெளி ஆதாரத் திட்டங்கள் மூலம் புதியதாக பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், 2021-24ஆம் நிதியாண்டுகளில் ரூ.1,240.63 கோடி மதிப்பில் 1,906 கி.மீ. நீளத்தில் 11,123 பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், 2024-25ஆம் நிதியாண்டில் ரூ.401.58 கோடி மதிப்பில் 578.74 கி.மீ. நீளத்தில் புதிதாக எடுத்துக் கொள்ளப்பட்ட 3,273 பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் அமைக்கும் பணிகளில் ரூ.252.97 கோடி மதிப்பில் 389.29 கி.மீ. நீளத்தில் 2,253 பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.42.33 கோடி மதிப்பில் 44.05 கி.மீ. நீளத்தில் 217 சாலைப் பணிகள் நடைபெற்று வருகிறது.

**மாநில நிதி ஆணையம் (SFC)**

மாநில நிதி ஆணைய திட்டத்தின் கீழ், ரூ.150 கோடி மதிப்பில் 220.07 கி.மீ. நீளத்தில் புதிதாக எடுத்துக் கொள்ளப்பட்ட 1,188 பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் அமைக்கும் பணிகளில் ரூ.136.66 கோடி மதிப்பில் 201.89 கி.மீ. நீளத்தில் 1,084 பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.5.26 கோடி மதிப்பில் 4.95 கி.மீ. நீளத்தில் 30 சாலைப் பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள சாலைப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIF)**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு (TURIF) திட்டத்தின் கீழ் ரூ.132.67 கோடி மதிப்பில் 176.04 கி.மீ. நீளத்தில் புதிதாக எடுத்துக் கொள்ளப்பட்ட 1,046 பேருந்து சாலைகள் மற்றும்

உட்புறச் சாலைகள் அமைக்கும் பணிகளில் ரூ.50.38 கோடி மதிப்பில் 83.3 கி.மீ. நீளத்தில் 577 பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.20.95 கோடி மதிப்பில் 20.25 கி.மீ. நீளத்தில் 81 சாலைப் பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள சாலைப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT)**

நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (NSMT) கீழ் ரூ.118.91 கோடி மதிப்பில் 182.63 கி.மீ. நீளத்தில் புதிதாக எடுத்துக் கொள்ளப்பட்ட 1,039 பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் அமைக்கும் பணிகளில் ரூ.65.93 கோடி மதிப்பில் 104.10 கி.மீ. நீளத்தில் 592 பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.16.12 கோடி மதிப்பில் 18.84 கி.மீ. நீளத்தில் 106 சாலைப் பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள சாலைப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நடைபெற்று வரும் சாலைப் பணிகள் அனைத்தும் பொறியாளர்களின் நேரடி மேற்பார்வையில், ஏற்கனவே அமைக்கப்பட்ட பழைய சாலைகள் முழுவதுமாக அகழ்ந்தெடுக்கப்பட்டு, புதிதாக அமைக்கப்படும் சாலைகள் தரமான சாலைகளாக அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில், திருவொற்றியூர் மண்டலம் முதல் சோழிங்கநல்லூர் மண்டலம் வரை ரூ.1.17 கோடி மதிப்பில் 126 பேருந்து சாலைகளில் கண்டறியப்பட்ட 5318 மீ. நீளத்திலான 574 பள்ளங்கள் சீர்செய்யப்பட்டுள்ளது. மேலும், சீர்செய்யும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**